©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 11.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 378A] சென்னை, செவ்வாய்கிழமை, செப்டம்பர் 15, 2020
ஆவணி 30, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| சட்டமுன்வடிவுகள்: | *பக்கங்கள்.* |
|---|---|
| எண் 24/2020—தமிழ்நாடு அரசு பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல்மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம் என வழங்கப்பெறும் .. .. .. .. | 2–8 |
| எண் 25/2020—தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும் .. .. | 9–10 |
| எண் 26/2020—தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும் .. | 11–18 |
| எண் 27/2020—தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகை முறைகளின் தளர்வு) சட்டம் என அழைக்கப்படும் .. .. .. .. .. .. .. .. .. | 19–22 |
| எண் 28/2020—தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என அழைக்கப்படும் .. | 23–27 |

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2020**

**அரசுப் பள்ளிகளில் பயின்ற மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவு தேர்வில் தகுதியான மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதியில் இளங்கலை படிப்புகளுக்கான சேர்க்கையில் முன்னுரிமை வழங்குவதற்கான ஒரு சட்ட முன்வடிவு.**

1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ குழுமச் சட்டம் (மையச் சட்டம் 102/1956), நாடு முழுவதும் இளங்கலை அளவிலான அனைத்து மருத்துவ கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்கான பொது நுழைவு தேர்வினை நடத்த ஆணையிடுகிறது என்பதாலும்;

அனைத்து மருத்துவ கல்வி நிறுவனங்களிலும் பொது நுழைவுத் தேர்வானது எம்.பி.பி.எஸ் படிப்பின் சேர்க்கைக்கான தகுதித் தேர்வு மட்டுமே என்பதாலும்;

அனைத்து மருத்துவ கல்வி நிறுவனங்களின் எம்.பி.பி.எஸ் படிப்புக்கான சேர்க்கையானது பொது நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே இருந்திட வேண்டுமென்பதாலும்;

அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தகுதித் தேர்வின் குறைந்த மதிப்பெண்களால் எம்.பி.பி.எஸ் படிப்பின் சேர்க்கையில் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான இடங்களையே அடைந்துள்ளனர் என்பதாலும்;

நீதியரசர் பி.கலையரசன் (ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி) தலைமையின் கீழ் மூத்த அலுவலர்கள் அடங்கிய ஆணையம் ஒன்று எம்.பி.பி.எஸ் படிப்பின் சேர்க்கையில் அரசுப்பள்ளி மாணவர்களின் குறைவான எண்ணிக்கைக்கான காரணங்களை மதிப்பீடு செய்ய மற்றும் பகுத்தாய்வதற்காக மற்றும் அரசுக்கு தீர்வு நடவடிக்கைகளை அறிவுறுத்துவதற்காகவும் அமைக்கப்பட்டது என்பதாலும்;

சாதி, பெற்றோரின் தொழில், பெற்றோரின் கல்வி, பெற்றோரின் வருமானம், பாலினம் போன்ற அத்தகைய சமூக–பொருளாதார காரணிகளால் உருவாக்கப்பட்ட அறிவாற்றலின் இடைவெளியை கருத்தில் கொண்டு கூறப்பட்ட ஆணையமானது, அரசுப்பள்ளி மாணவர்கள் தனிப்பட்ட வகுப்பினை சேர்ந்தவர்கள் மற்றும் தனியார் பள்ளி மாணவர்களை ஒப்பிடுகையில் குறைபாடான நிலையிலுள்ளனர் என முடிவு செய்தது மற்றும் இதனால், மாநில அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் மேல்நிலை படிப்பு வரையில் படித்து மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதியான மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எம்.பி.பி.எஸ் படிப்புக்கான சேர்க்கையில் பத்து விழுக்காடு இடங்கள் ஒதுக்கி வைக்க முடியுமென பரிந்துரை செய்தது என்பதாலும்;

கூறப்பட்ட ஆணையமானது தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வினை தகுதிக்கான அளவுகோலாக வகுத்துரைக்கப்பட்டுள்ள அனைத்து படிப்புகளுக்கும் மேற்சொன்ன ஒதுக்கீடானது நீட்டிக்க முடியுமெனவும் பரிந்துரை செய்துள்ளது என்பதாலும்;

புரிந்து கொள்ளத்தக்க வேறுபாடாலான நியாயமான வகைபாட்டினை அரசியலமைப்பின் 14 மற்றும் 15 ஆம் உறுப்புகள் அனுமதித்து மற்றும் அதன்மூலம் சமமற்றவர்களுக்கு வேறுபாடான நடத்துமுறையை அனுமதிக்கிறது என்பதாலும்;

அரசானது, கூறப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகளை கவனமாகக் கருத்தில் கொண்ட பின்பு, மாநில அரசுப் பள்ளிகளின் கூறப்பட்ட தேர்வில் தகுதியடைந்துள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு தகுதித் தேர்வாக வகுத்துரைக்கப்பட்ட எம்.பி.பி.எஸ் படிப்பு மற்றும் பிற மருத்துவ படிப்புகளின் சேர்க்கையில் ஏழரை விழுக்காடு இடங்களை ஒதுக்க முடிவு செய்துள்ளது என்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு இயற்றப்படுவதாகுக;

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றில் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச்சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.–

(a) ‘அரசு’ என்பது மாநில அரசு என்று பொருள்படும்.

(b) ‘அரசு இடங்கள்’ என்பது ,–

(i) அனைத்து இந்திய ஒதுக்கீட்டிற்காக ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர, அரசு கல்லூரிகளில் உள்ள எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ், பி.எஸ்.எம்.எஸ், பி.ஏ.எம்.எஸ், பி.யூ.எம்.எஸ் மற்றும் பி.எச்.எம்.எஸ். படிப்புகளில் அனைத்து இடங்கள் மற்றும்

(ii) சிறுபான்மையினர் அல்லாத கல்வி நிறுவனங்களில் எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ், பி.எஸ்.எம்.எஸ், பி.ஏ.எம்.எஸ், பி.யூ.எம்.எஸ், மற்றும் பி.எச்.எம்.எஸ். படிப்புகளில் 65 விழுக்காடு இடங்கள் மற்றும் சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் 50 விழுக்காடு இடங்கள் அல்லது அத்தகைய நிறுவனங்கள் மற்றும் அரசிற்கு இடையேயான கருத்தொற்றுமைக்கு இணங்கிய வகையிலான இடங்கள் என்று பொருள்படும்;

(c) ‘அரசுப்பள்ளிகள்’ என்பது அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகள், வனத்துறைப் பள்ளிகள் மற்றும் அரசுத் துறைகளினால் நிர்வகிக்கப்படும் பிற பள்ளிகள் ஆகியவற்றை உள்ளடக்கும் என்று பொருள்படும்;

(d) ‘அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள்’ என்பது ஓர் அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் மேல்நிலைப் பள்ளி படிப்பு வரை பயின்ற குழந்தைகள் மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதியானவர்கள் என்று பொருள்படும்.

மையச் சட்டம் 35/2009.

és¡f« – இந்த பொருள் வரையறையின் நோக்கத்திற்காக, 2009ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (c) ஆம் கூறின்படி ஒரு குறிப்பிட்ட வகையிலான பள்ளி அல்லது ஓர் உதவி பெறாத பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை பயின்ற நலிவுற்ற பிரிவினர் மற்றும் குறைபாடுடைய பிரிவினைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் அரசுப் பள்ளியில் மேனிலைப் படிப்பு வரை மீதமுள்ள அனைத்து வகுப்புகளையும் பயின்ற மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வில் தகுதிபெற்றவர்கள் ‘அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களாக’ கருதப்படுதல் வேண்டும்;

(e) ‘சிறுபான்மையினர் கல்வி நிறுவனம்’ என்பது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகளுக்குட்பட்டு, அரசால் அத்தகையவாறு அறிவிக்கப்பட்ட அல்லது இசைவேற்பு பெற்ற ஒரு கல்வி நிறுவனம் என்று பொருள்படும்;

(f) ‘எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ், பி.எஸ்.எம்.எஸ், பி.ஏ.எம்.எஸ், பி.யூ.எம்.எஸ், மற்றும் பி.எச்.எம்.எஸ். படிப்புகள்’ என்பது மருத்துவத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம், பல் மருத்துவ அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம், சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம், ஆயூர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம், யுனானி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம் மற்றும் ஓமியோபதி மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளங்கலை பட்டம் ஆகியவற்றின் முதலாம் ஆண்டு என்று பொருள்படும்;

(g) ‘தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு’ என்பது முறையே ‘எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ், பி.எஸ்.எம்.எஸ், பி.ஏ.எம்.எஸ், பி.யூ.எம்.எஸ், மற்றும் பி.எச்.எம்.எஸ். ஆகிய படிப்புகளுக்கான சேர்க்கைக்காக 1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ குழுமச் சட்டம், 1948ஆம் ஆண்டு பல் மருத்துவச் சட்டம், 1986 ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மைய குழும (இந்திய மருத்துவத்தில் கல்வியின் குறைந்தபட்ச தரங்கள்) ஒழுங்குமுறை விதிகள் மற்றும் 1983ஆம் ஆண்டு ஓமியோபதி (பட்டப்படிப்பு) ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றின் கீழ் பதவியமர்த்தப்பட்ட அதிகார அமைப்பினால் நடத்தப்படும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு என்று பொருள்படும்.;

(h) ‘தனியார் பள்ளி’ என்பது ஓர் அரசுப் பள்ளி அல்லாத ஒரு பள்ளி என்று பொருள்படும்.

முன்னுரிமை அடிப்படையிலான சேர்க்கை.

**3.** தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் மற்றும் 5ஆம் பிரிவிற்குட்பட்டு, அரசு இடங்களின் ஏழரை விழுக்காடானது அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

பாதிக்கப்படாத பிற இடங்களுக்காக போட்டியிடும் உரிமை.

**4.** அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள், தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுடனிணைந்து முன்னுரிமையின் அடிப்படையிலான ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களைத் தவிர, அரசு இடங்களுக்காக போட்டி உரிமையுடையவராகுதல் வேண்டும்.

விண்ணப்பிப்பதற்கான இட ஒதுக்கீடு.

**5.** 3ஆம் பிரிவின் கீழ் முன்னுரிமையின் அடிப்படையிலான அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் சேர்க்கையானது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி இட ஒதுக்கீட்டினை பின்பற்றி செய்யப்படுதல் வேண்டும்.

முன்னுரிமை இடங்களை நிரப்புதல்.

**6.** பிரிவு 3இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கான சேர்க்கைக்காக, அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது போதுமானதாக இல்லாதவிடத்து, அத்தகைய நிரப்பப்படாத இடங்களானது, தனியார் பள்ளிகளில் படித்த மாணவர்களைக் கொண்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**7.** (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் ஏனும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று செயலாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளான்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**(3)** இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவைகளின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்டக் கூட்டத் தொடர் அல்லது அந்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் ஆகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**8.** இந்தச் சட்டத்தின் ஏதேனும் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** ஆணை ஒன்றினை வெளியிடுவதன் மூலமாக, அந்த இடர்பாட்டை நீக்குவதற்காக தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத் தோன்றக் கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக அல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம். வரம்புரையாக, அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்பு செய்யப்படுதல் ஆகாது.

கட்டளைகள் வழங்குவதற்கான அதிகாரம்.

**9.** அரசு, அவ்வப்போது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக, அது உகந்ததென்று கருதலாகும் அத்தகைய கட்டளைகளை பிறப்பிக்கலாம்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2017–2018 ஆம் கல்வியாண்டிலும் அது முதற்கொண்டும், நாடு முழுவதும் அனைத்து மருத்துவக் கல்வி நிலையங்களில் இளங்கலை மற்றும் முதுகலை அளவிலான பட்டப்படிகளுக்கு பொது நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் சேர்க்கை நடைபெற்று வருகிறது. அதன் பின்னர், மாநிலத்தில் எம்.பி.பி.எஸ் படிப்பிற்கு அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் அடைந்த சேர்க்கைகளானது, வெகுவாகக் குறைந்து விட்டது. எம்.பி.பி.எஸ் படிப்பிற்கு அரசுப் பள்ளி மாணவர்கள் குறைந்த எண்ணிக்கையிலான சேர்க்கையினைப் பெறுவதற்கான காரணங்களை மதிப்பிடவும், பகுத்தாராயவும் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை அறிவுறுத்தவும், நீதியரசர் P. கலையரசன் (ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி) அவர்களின் தலைமையின் கீழ் மூத்த அலுவலர்களை உள்ளடக்கிய ஆணையம் ஒன்றினை அரசானது அமைத்தது.

2. ஆணையம், அதன் முடிவில், சாதி, சொத்து, பெற்றோரின் தொழில், பெற்றோரின் கல்வி, பாலினம் போன்ற சமூகப் பொருளாதார காரணிகளால், உருவாக்கப்பட்ட அறிவாற்றலின் இடைவெளியின் காரணமாக, அரசுப் பள்ளியின் மாணவர்கள், தனியார் பள்ளிகளில் அவர்களின் ஒத்த நிலையினருடன் ஒப்பிடப்படும்போது ஒரு குறைபாடான நிலையில் வைக்கப்படுகிறார்கள் எனவும், இந்த உளவியல் சார்ந்த மற்றும் சமூகப் பொருளாதார குறைபாடுகள், சில மாதங்கள் தீவிர பயிற்சி அளிப்பதன் மூலம், இலவசமாக வழங்கப்பட்டாலும் கூட, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வின் குறைபாட்டினை நீக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளது. இந்த குறைபாட்டினை களைவதற்கு ஆணையமானது, மாநில அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் மேல்நிலைப் பள்ளிப்படிப்பு வரை படித்த மற்றும் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எம்.பி.பி.எஸ் படிப்பின் சேர்க்கைக்காக பத்து விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்யப்பட முடியும் என பரிந்துரைத்துள்ளது. ஆணையமானது, மேலும், மேற்சொன்ன இடஒதுக்கீடானது தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வின் தகுதி அளவுகோலாக குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து படிப்புகளுக்கும் நீட்டிக்கப்படலாம் என பரிந்துரைத்துள்ளது.

3. ஆணையத்தின் அறிக்கையிலிருந்து, அரசுப்பள்ளி மாணவர்களுக்கும் தனியார் பள்ளி மாணவர்களுக்குமிடையில் உண்மையான ஏற்றத் தாழ்வுகள் உள்ளன என்பது தெளிவாகின்றது. அரசானது, ஆணையத்தின் பரிந்துரையைக் கவனமாக பரிசீலனை செய்த பின்னர், எம்.பி.பி.எஸ் மற்றும் கூறப்பட்ட தேர்வினை மாநிலத்தில் தகுதித் தேர்வாக குறித்துரைக்கப்பட்டுள்ள, பிற மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் தகுதிபெற்ற அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் படித்த மாணவர்களுக்கிடையே உண்மையான சமத்துவத்தைக் கொண்டு வருவதற்கு, உறுதியான நடவடிக்கையை எடுப்பதென முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மரு. சி. விஜயபாஸ்கர்,**
*மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 2(e), 7, 8 மற்றும் 9 ஆகிய கூறுகள், இதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, விதிகளைச் செய்வதற்கும் அல்லது அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை வழங்குவதற்கும் அரசிற்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்ததல்ல.

சென்னை,
2020 செப்டம்பர் 15.

**மரு. சி. விஜயபாஸ்கர்**,
*மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2020

### 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு

இந்தியக் குடியரசின் எழுபத்தியொன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம் 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்தச்) சட்டம் என்று வழங்கப் பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் III/ 1939. 2. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் 74—ஆம் பிரிவில், பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :— 74—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(6) தானாகவோ அல்லது ஒரு குழுவின் உறுப்பினராகவோ இருந்து அறிவிக்கை வெளியிடப்பெற்ற நோயினால் பாதிக்கப்படும் போது இறந்து போன எந்தவொரு நபரின் உடலை புதைப்பதை அல்லது எரியூட்டுவதை தடுக்கும் அல்லது இடையூறு செய்யும் அல்லது தடுக்க அல்லது இடையூறு செய்ய முயற்சிக்கும் நபர் எவரும் பண தண்டத்துடன் கூடிய ஓர் ஆண்டிற்குக் குறையாத, ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.”

தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2020. 3. (1) 2020—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்த) அவசரச் சட்டம் இதன் மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவு மற்றும் காப்புரை

(2) அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான 1939—ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை**

கோவிட்–19 காரணமாக இறந்து போன நபர்களை புதைத்தல் அல்லது எரியூட்டல் செய்தலை பொது மக்கள் தடுக்கும் சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அத்தகைய செயல்கள் மனித சடலத்திற்கு அவமதிப்பினை ஏற்படுத்துகின்ற மிகவும் கண்டிக்கத் தக்கவைகளாகும். எனவே, அரசு, அத்தகைய செயல்களை தண்டனைக்குரிய குற்றம் என முடிவு செய்தும் அதற்கிணங்கிய வகையில் மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் III/1939) திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2020) 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாளன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு அது, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு பதிலாக அமைய விழைகிறது.

சென்னை,
2020 செப்டம்பர் 15.

**மரு. சி. விஜயபாஸ்கர்,**
*மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2020**

இந்தியக் குடியரசின் எழுபத்தியொன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம் 2020ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப் பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் III/1939. 2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என வழங்கப்படுவதான) 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில் , 3ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1)ஆம் கூறானது (1–A) ஆம் கூறாக மறு எண்ணாக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறு எண்ணாக்கப்பட்ட(1–A) ஆம் கூறின் முன்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

"(1) "வன்முறைச்செயல்" என்பது தொற்று நோய்களின் கட்டுப்பாடு, சிகிச்சை மற்றும் கட்டுப்படுத்துதலில் ஈடுபடும் காவல் பணியாளர் உள்ளடங்கிய பணியாளர் எவருக்கும் எதிராக நபரொருவரால் செய்யப்பட்ட, பின்வரும் செயல்கள் எதுவும் உட்பட, எது விளைவிக்கும் அல்லது விளைவிக்கலாகும்–

(a) அத்தகைய பணியாளரின் வாழ்க்கை முறை அல்லது பணிநிலைகளில் தாக்கம் ஏற்படுத்துகிறது மற்றும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுதலிலிருந்து அவர்களை தடுக்கிறது;

(b) அத்தகைய பணியாளரின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தும் அல்லது ஆபத்து விளைவிக்கும் தீங்கு, காயம், ஊறு;

(c)அத்தகைய பணியாளர்கள் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுதலில் தடை அல்லது இடையூறு ஏற்படுத்துதல்;

(d) அத்தகைய பணியாளர்களின் காப்புப் பொறுப்பிலுள்ள அல்லது தொடர்பிலுள்ள உடைமை அல்லது ஆவணங்கள் எவற்றிற்கும் இழப்பு அல்லது ஊறு;"

(2) (17) ஆம் கூறின் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(17–A) "தனிமைப்படுத்துதல்" என்பதற்கு தொற்று நோயின் பரவுதலை நேரடியாக அல்லது மறைமுகமாக தடுப்பதற்காக அல்லது வரையறுப்பதற்காக, அந்நோயின் தொற்றுத்தன்மையின் உயரளவாக அறியப்பட்ட கால அளவினை மிகாது கால அளவிற்கு அல்லது அந்நபர் நோயிலிருந்து குணமடையும் காலம் வரை தொற்றுநோயினால் துன்பம் அடைந்த நபர் ஒருவரை பிறரிடமிருந்த முழுமையாக பிரித்தல் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் காப்பில் வைத்தல் என்று பொருள்படும்; " ;

(3) (30) ஆம் கூறின் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும்; அதாவது:–

"(30–A) "காவல் அலுவலர்" என்பது காவல் துணை ஆய்வாளரின் படிநிலைக்கு குறையாத ஓர் அலுவலர் என்று பொருள்படும்;";

(4) (32) ஆம் கூறின் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(32–A) "தொற்று தடைக்காப்பு" என்பதற்கு அந்நோய் பிறருக்கு பரவுதலுக்கான நிகழ்வினை தடுப்பதற்காக, அந்நோயின் அடைகாத்தலுக்கான உயரளவென அறியப்பட்ட காலத்திற்கு மிகாது ஒரு கால அளவிற்கு, தொற்று நோய்க்கு வெளிப்பட்டதாக நியாயமாக நம்பப்படலாகும் நபரொருவரின் நடமாட்ட உரிமையை வரைறுத்தல் அல்லது கட்டுப்படுத்துதல் என்று பொருள்படும்;";

(5) (33) ஆம் கூறின் பின்பு பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(33–A) "சமூக இடைவெளி" என்பதற்கு சமுதாயத்தில் நோயின் பரவும் வீதத்தை குறைக்கும் பொருட்டு, தங்கள் வீட்டின் வெளியே மக்களுக்கு இடையிலான உடல்சார்ந்த இடைவெளி அல்லது விலகலை பெருக்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை எதுவும் என்று பொருள்படும் மற்றும் உள்ளடங்கும்;";

65ஆம் பிரிவின் திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் **65**ஆம் பிரிவில் உட்பிரிவு **(1)**–ல் "சுகாதார அலுவலர் அல்லது இதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவர்" என்ற சொற்றொடருக்கு பதிலாக "சுகாதார அலுவலர் அல்லது இதன் பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவர் அல்லது காவல்துறை அலுவலர்" என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

76ஆம் பிரிவின் திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் **76**ஆம் பிரிவில், **(2)** ஆம் உட்பிரிவிற்கு பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

(2) (1) ஆம் உட்பிரிவின் **(a)** ஆம் கூறு அல்லது **(b)** ஆம் கூறின் கீழ் ஒரு சாற்றுரையானது நடைமுறைக்கு வருகையில் மற்றும் அது திரும்பப் பெறும் வரையில், மாவட்டத்தின் ஆட்சியர் அல்லது அவரால், பொது ஆணையினாலோ சிறப்பு ஆணையினாலோ தக்கவாறு அதிகாரமளிக்கப்பெற்ற நபரொருவர் அல்லது இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின் பொருட்டு உரிமையளிக்கப்பட்டிருந்தால், சுகாதார அலுவலர் அல்லது தொடர்பான உள்ளூர் அதிகார அமைப்பின் ஏனைய பிற அலுவலர் அல்லது காவல்துறை அலுவலர் எவரும், அல்லது மாவட்ட ஆட்சியர் தவிர்த்து அரசின் பிற அலுவலரெவரும், விலக்குகள், தடைகள், வரையறைகள் நிபந்தனைகள் மற்றும் பொதுவாகவோ சாற்றுறை தொடர்புடைய அறிவிக்கப்பட்ட நோயின் நேர்விலோ வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய கட்டுப்பாடுகளுக்குட்பட்டு பின்வரும் அதிகாரங்களை செயற்படுத்தலாம், அதாவது:–

(a) நோய்த் தொற்றிய வீடுகள் மற்றும் அவற்றிற்கு அடுத்திருக்கும் அல்லது அருகாமையிலிருக்கும் வீடுகள் அல்லது பொதுவாக நோய் தொற்றிய பகுதியொன்றில் இருக்கும் அனைத்து வீடுகளில் வெளியேற்றலை ஒழுங்குப்படுத்துல்;

(b) (3) ஆம் உட்பிரிவின் வழிவகைகளுக்கு உட்பட்டு தடுப்பூசியிடுதல் மற்றும் நோய்க் காப்பு மருந்தளித்தலை கட்டாயமாக்குதல்;

(c) (i) உள்ளூர் பகுதிக்கு வெளியிடங்களிலிருந்து வரும் அல்லது நோய்த் தொற்றிய கட்டிடமொன்றிக்கு அடுத்துள்ள அல்லது அருகாமையிலுள்ள கட்டிடத்தில் வசிக்கும் நபர்களை மருத்துவ அதிகாரியால் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்;

(ii) தனிமைப்படுத்துதலிலுள்ள அல்லது தொற்றுத் தடைக் காப்பிலுள்ள அந்நபர்கள் மருத்துவ அதிகாரியினால் பரிசோதனை செய்யப்பட அல்லது தேவையான சோதனைக்குள்ளாக வேண்டும்;

(iii) நோய்த் தொற்றிற்கு அவர்கள் வெளிப்பட்டிருக்கலாமென ஐயம்கொள்ள காரணம் இருக்கையில், அத்தகைய நபர்களின் உடைகள், படுக்கை அல்லது பிற பொருட்களை தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்;

(iv) அத்தகைய நபர் தன் முகவரியை கொடுக்க வேண்டும் மற்றும் குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் இடத்தில், பதினான்கு நாட்களுக்கு மிகாது கால அளவிற்கு, மருத்துவ பரிசோதனைக்கு தினமும் வந்திருத்தல் வேண்டுமென கட்டளையிடுதல்;

(d) தேவைப்படலாகும் அத்தகைய நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் –

(i) அறிவிக்கப்பட்ட நோயொன்றிலிருந்து தொற்றுக்கு வெளிப்பட்ட நபர்கள் குறித்த அல்லது தொடர்பிலுள்ள அல்லது அத்தகைய நோயினை பிற நபர்களுக்கு தொற்றளிக்கக் கூடியவை தொடர்பாக; மற்றும்

(ii) அறிவிக்கப்பட்ட நோயொன்றிலிந்து தொற்றிற்கு வெளிப்பட்ட பொருட்கள் குறித்த அல்லது தொடர்பிலுள்ள அல்லது அத்தகைய நோயினை பிற நபர்களுக்கு தொற்று ஏற்படுத்தக் கூடியவை தொடர்பாக, இதில் உள்ளடக்கம், நேர்வு (i), அத்தகைய நபரது நடமாட்டத்தில் தடை ஏற்படுத்துதல், நேர்வுக்கேற்ப அத்தகைய நபரை தனிமைப்படுத்துதல் அல்லது தொற்றுத் தடைக்காப்பில் வைத்தல், மற்றும் நேர்வு (ii), அத்தகைய பொருட்களை அழித்தல் மற்றும் உள்ளூர் பகுதியில் அவற்றின் ஏற்றுமதி, இறக்குமதி அல்லது போக்குவரத்தில் தடை ஏற்படுத்துதல்;

(e) உள்ளூர் பகுதிக்கு உட்பட்ட அல்லது வெளியிலுள்ள இடம் எவற்றிலும், அப்பகுதியில் தண்டவாளம், சாலை அல்லது மற்றவகையில் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்படும் தானியத்தின் அனுப்புச் சரக்கு எவற்றையும் குறிப்பிட்ட முறை எதிலும் ஆய்வு செய்தல், மற்றும், தேவையெனில் சுமையிறக்கம் மற்றும் தொற்று நீக்கம் செய்தல் வேண்டும்;

(f) தற்போதுள்ள சந்தை எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் மூடுதல் மற்றும் சந்தைகள் இயங்க சிறப்பு இடங்களை அமர்த்துதல்;

(g) பொது மற்றும் தனியார் போக்குவரத்து இயங்கும் முறையில் தடைகளை விதித்தல்;

(h) பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு தேவையான சமூக இடைவெளி நெறிமுறைகள் அல்லது பொது மக்கள் கடைபிடிக்க வேண்டிய முக கவசம் அணிதல் மற்றும் பொது இடங்களில் உமிழ்தலுக்கான தடை உள்ளடங்கிய பிற அறிவுரைகளை உறுதி செய்தல்;

(i) அழகு நிலையம் மற்றும் ஸ்பா, உடற்பயிற்சிக்கூடம் மற்றும் அத்தகைய பிற பொது இடங்களில் பின்பற்ற வேண்டிய நிலையான வழிகாட்டு நடைமுறைகளை வழங்குதல்;

(j) அரசினால் வெளியிடப்பட்ட, கட்டுப்பாட்டு மண்டலங்களில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களின் கடைபிடித்தலை உறுதி செய்தல்;

**விளக்கம்.–** இக்கூறின் நோக்கத்திற்காக ''கட்டுப்பாட்டு மண்டலம்'' என்பதற்கு நேர்வுக்கேற்ப மாவட்ட ஆட்சியரால், அல்லது மாநகரத்தின் மாநகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்ட, திரள் நோய் தொற்று நேர்வுகளின் அடிப்படையில் அத்தகைய வழியில் எல்லை வரையறுக்கப்பட்ட பகுதி எனப் பொருள்படும்;

(k) பொது இடங்களில், மதம் சார்ந்த நிலையங்களில் மற்றும் வழிபாட்டு இடங்களில் நபர்கள் கூடுதலை தடை செய்தல் அல்லது விலக்களித்தல்;

(l) அரசு அல்லது மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல்களின்படி அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் மற்றும் கல்வி நிலையங்களின் செயல்பாடுகளை உறுதி செய்தல்;

(m) அரசு அல்லது மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல்களின்படி கடைகள், வணிகப் பயனுடைய நிறுவனங்கள், தொழிற்கூடங்கள், பட்டறைகள், கிடங்கு முதலியவற்றின் செயல்பாடுகளில் தடை அல்லது விலக்களித்தலை உறுதி செய்தல்;

(n) அரசு அல்லது மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல்களின் படி வங்கிகள், ஊடகம், சுகாதார நலன், உணவு வழங்குதல், மின்சாரம், குடிநீர் வழங்குதல், எரிபொருள் முதலியவை போன்ற கட்டாய அல்லது அவசர கால சேவைகளின் சேவைகளுக்கான கால அளவினை உறுதி செய்தல்;

(o) உள்ளூர் பகுதியில் புறப்பாடு, வருகை அல்லது கடந்து செல்லும் வாகனம் எதையும், கப்பல், அல்லது ஏனைய பிற போக்குவரத்தின் ஆய்வு மற்றும், தேவையெனில் காப்பில் வைத்தலுக்கு ஏற்பாடு செய்தல்;

(p) பொது சுகாதார அவசர காலங்களில் தோன்றும் நேர்வுகளை அனுமதிக்க, தனிமைப்படுத்த மற்றும் நிருவகிக்க வகுத்துரைக்கப்படலாகும். அத்தகைய வடிவத்திலும் மற்றும் அத்தகைய முறையிலும் அறிக்கை அல்லது விவர அறிக்கை அளித்தல் மற்றும் வழிகாட்டியபடியான அத்தகைய சேவைகளை வழங்க தனியார் மருத்துவ நிறுவனம் எதற்கும் வழிகாட்டுதல்.

**விளக்கம்.** – இக்கூறின் நோக்கத்திற்காக "தனியார் மருத்துவ நிறுவனம்" என்பதற்கு 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் மருத்துவ நிறவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4 / 1997)–இன் 2–ஆம் பிரிவில் (a) கூறில் பொருள் வரையறுக்கப்பட்டதொரு தனியார் மருத்துவ நிறுவனம் என்றும் பொருள்படும்;

(q) பொது சுகாதாரத்திற்கு எதிர்மாறாகப்படக்கூடிய நடவடிக்கை எதையும் தடை செய்தல்;

(r) பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்ட நோய்கள், நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் முதலியவை தொடர்பான தகவலை பரப்புதலை உறுதி செய்தல் மற்றும் பொது ஊடகங்களில் தவறான தகவல் பரவுதலை தடை செய்தல்;

மற்றும்

(s) அறிவிக்கப்பட்ட நோய்களின் ஒழுங்குப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் தடுப்பதற்கான அரசு அல்லது மாவட்ட ஆட்சியரால் வழிகாட்டப்படலாகும் அத்தகைய பிற செயல்கள் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

77–A எனும் புதிய உட்பிரிவினைப் புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டத்தின் 77–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"77–A. வன்முறை செயல்களுக்கான தடை– (1) தொற்று நோய்களின் தடுப்பு, சிகிச்சை மற்றும் கட்டுப்படுத்துதலில் ஈடுபட்டுள்ள பணியாளர் ஒருவருக்கெதிராக, எந்தவொரு நபரும் ஏதேனும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல் கூடாது.

(2) இந்தப் பிரிவின் படி ஏதேனும் குற்றச் செயலினை செய்த அல்லது செய்வதற்கு உடந்தையாயிருந்த நபரெவரும், மூன்று மாதங்களுக்குக் குறையாத, ஆனால் இரண்டாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு கால அளவுக்கு சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்கு குறையாத, ஆனால் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்".

128–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 128ஆம் பிரிவில், பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(3) (a) இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு அவை வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்;

(b) இந்தச் சட்டத்தின் படி வழங்கப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும், ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு அவை வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை, அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடியவிரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்டக் கூட்டத் தொடர் அல்லது அந்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை

அல்லது ஆணை செய்யப்படுதல் ஆகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும். அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.''

130–ஆம் பிரிவினை விட்டுவிடுதல்.

**7.** முதன்மைச் சட்டத்தின் **130** ஆம் பிரிவினை விட்டுவிடப்படுதல் வேண்டும்.

135–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** முதன்மைச் சட்டத்தின் **135** ஆம் பிரிவில், ''அல்லது சுகாதார அலுவலர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, அது வருகின்ற இரு இடங்களிலும், ''அல்லது சுகாதார அலுவலர் அல்லது காவல் அலுவலர்'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

135–A எனும் புதிய பிரிவினைப் புகுத்தல்.

**9.** முதன்மைச் சட்டத்தின் **135** ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''**135–A.** நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள் – **(1)** இந்தச் சட்டத்திற்கெதிரான குற்றச் செயல் ஒன்று, ஒரு நிறுமத்தால் செய்யப்படுகிறவிடத்து, அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்ட நேரத்தில் அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதற்குப் பொறுப்பாயிருந்து வரும், பொறுப்பிலிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அத்துடன் அந்த நிறுமமும் அந்தக் குற்றச் செயலை செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கிணங்கிய வகையால் தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும். வரம்புரையாக, ஆனால் நபர் எவரும், அத்தகைய குற்றச் செயல் தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதென்று அல்லது அந்தக் குற்றச்செயல் செய்யப்பட்டதைத் தடுப்பதற்குத் தாம் உரிய முயற்சி அனைத்தையும் எடுத்தார் என்று மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் தண்டனை எதற்கும் அவரை உள்ளாக்காது.

**(2) (1)** ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றச்செயலானது ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டு அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டு இருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுமிடத்து,அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச் செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதலும், அதற்கெதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம். –** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, –

(a) ''நிறுமம்'' என்பது, கூட்டுக்குழுமம் எதுவும் என்று பொருள்படும் மற்றும் தனியாட்களின் ஒரு நிறுவகம் அல்லது பிற கழகம் எதனையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) ஒரு நிறுவகம் தொடர்பாக இயக்குநர் என்றால், அந்த நிறுவகத்தின் கூட்டாளி ஒருவர் என்று பொருள்படும்.

138–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** முதன்மைச் சட்டத்தின் **138** ஆம் பிரிவில்,

(1) "காவலரால்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "காவல் அலுவலரால்" என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2)** வரம்புரையில் "**1898** ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம், (மையச் சட்டம் V/1898)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "**1973** ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டம், (மையச் சட்டம் **2/1974**)" என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

138A–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** முதன்மைச் சட்டத்தின் 138– A ஆம் பிரிவில், ‘‘செயலாட்சி அதிகாரி அல்லது சுகாதார அலுவலர்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘செயலாட்சி அதிகாரி அல்லது சுகாதார அலுவலர் அல்லது காவல் அலுவலர்’’ என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

142–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**12.** முதன்மைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில், ‘‘அல்லது அரசின்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘அல்லது அரசின் அல்லது காவல் அலுவலரின்,’’ என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவில், ‘‘அல்லது அரசின்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘அல்லது அரசின் அல்லது காவல் அலுவலரும் இல்லை’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்

143–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**.13.** முதன்மைச் சட்டத்தின் 143 ஆம் பிரிவில், ‘‘அல்லது அரசின்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘அல்லது அரசின் அல்லது காவல் அலுவலரின்’’ என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்,

அட்டவணை I–ற்கானத் திருத்தம்.

**14.** முதன்மைச் சட்டத்தின் 1 வது அட்டவணையில் (1)–வது வரிசையில் 76–வது பிரிவிற்கு தொடர்புடைய (4)–வது வரிசையில் ‘‘ஓராயிரம் ரூபாய்’’ என்ற சொற்களுக்கு பதிலாக ‘‘ஐந்தாயிரம் ரூபாய்’’ என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கறவு மற்றும் காப்பு.

**15.** (1) 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம், இதன் மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/2020.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின் படி 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்த சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ, அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

கோவிட்–19–இன் பரவுதலைக் கட்டுப்படுத்த, பொது முடக்கம் மற்றும் சமூக இடைவெளி நடவடிக்கைகளானது அரசினால் எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளை செயற்படுத்தும் நபர்களுக்கெதிரான வன்முறைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அத்தகைய வன்முறைச் செயல்களானது, சமுதாயத்தில் கோவிட்–19–இன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தடங்கல் செய்கிறது மற்றும் மக்கள் நல்வாழ்வின் முன்னேற்றத்தை பின்னடையும்படிச் செய்கிறது. எனவே, கோவிட்–19–இன் பரவுதலை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட பொது முடக்கம் மற்றும் சமூக இடைவெளி நடவடிக்கைகளுக்கெதிரான வன்முறைகளை, குற்றச்செயல்களாக்குவதும் இந்த நடவடிக்கைகளை செயற்படுத்தும் நபர்களுக்கெதிரான வன்முறைச் செயல்களைத் தடை செய்வதும் தேவையானதெனக் கருதப்பட்டது.

2. அரசானது, மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1939 ஆம் ஆண்டு (தமிழ்நாடு சட்டம் III/1939)–ஐ திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கிய வகையில், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/2020), 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4ஆம் நாளன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு மற்றும் அது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இந்த சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

சென்னை,
2020 செப்டம்பர் 15.

**மரு. சி. விஜயபாஸ்கர்,**
*மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2020**

**குறித்த சில சட்டங்களின் வகைமுறைகளில் தளர்விற்கு மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது 2020–ஆம் ஆண்டு மே திங்கள் 23–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், தருவாயின் தேவை வேறுபொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

(a) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(b) ''அறிவிக்கை'' என்பது ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிவிக்கையாக வெளியிடப்பட்டது என்று பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. 3. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தில் 86–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 86A–எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

''86A. சிறப்பு சூழ்நிலைகளில் கால வரம்பை நீட்டிக்க அரசுக்கான அதிகாரம்.– (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, பேரிடரின் காரணமாக நிறைவு செய்யவோ அல்லது உடன்படவோ முடியாத செயல்களைப் பொறுத்தவரை இந்தச் சட்டத்தின் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட அல்லது வகுத்துரைக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட கால வரம்பை நீட்டிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)–இன் படி அறிவிக்கை வெளியிடுவதற்கான அதிகாரமானது, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாக அல்லாத ஒரு தேதியிலிருந்து அத்தகைய அறிவிக்கைக்குப் பின்னோக்கிய விளைவை அளிக்கும் அதிகாரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ''பேரிடர்'' எனும் சொற்றொடரானது போர், தொற்றுநோய், வெள்ளம், வறட்சி, தீ, புயல், நிலநடுக்கம் அல்லது இயற்கையால் ஏற்படும் வேறு ஏதேனும் பேரிடர் அல்லது இந்தச் சட்டத்தின் எந்தவொரு வகைமுறைகளின் செயல்பாட்டினையும் பாதிக்கும் வேறு எதுவும் எனப் பொருள்படும்.''.

(தமிழ்நாடு சட்டம் XX/1935) (தமிழ்நாடு சட்டம் X/1939) (தமிழ்நாடு சட்டம் 6/1981) (தமிழ்நாடு சட்டம் 22/1983) (தமிழ்நாடு சட்டம் 13/1990) (தமிழ்நாடு சட்டம் 20/2001) (தமிழ்நாடு சட்டம் 19/2017)

4. 1935–ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தைய வரிச் சட்டம், 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1981–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் மீதான வரிச் சட்டம், 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1990–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் இயக்கூர்திகள் நுழைதல் மீதான வரிச் சட்டம், 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் சரக்குகள் நுழைதல் மீதான வரிச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 174–ஆம் பிரிவின் மூலம் அதனை நீக்கறவு செய்வதற்கு முன்பாக இருந்தபடி, ஆகிய சட்டங்களில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், 2020 மார்ச் 20–ஆம் நாளிலிருந்து 2020 ஜுன் 29–ஆம் நாள் வரையிலான கால அளவில் அல்லது 2020 ஜுன் 29–ஆம் நாளுக்குப் பின்பு, அத்தகைய நடவடிக்கை நிறைவு செய்தவற்காக அல்லது உடன்படுத்துவதற்காக, அரசு, அறிவிக்கையின் வாயிலாக, குறித்திடலாகும், அத்தகைய பிற தேதியின் கீழ் வரும் கால அளவில், கூறப்பட்ட சட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட, அல்லது வகுத்துரைக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட, கால வரம்பானது– குறித்த சில இயற்றுச் சட்டங்களின் படி கால வரம்பைத் தளர்த்துதல்.

(a) நடவடிக்கை எதையும் நிறைவு செய்தல் அல்லது அதிகார அமைப்பு, ஆணையம், தீர்ப்பாயம் எவற்றினாலும், எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும், ஆணை, அறிவிப்பு, தகவல், அறிவிக்கை அல்லது ஒப்பளிப்பு அல்லது ஏற்பு எவற்றையும், எந்த பெயரால் அழைக்கப்பட்டாலும், வழங்குதல்; அல்லது

(b) மேல்முறையீடு, பதில் அல்லது விண்ணப்பம் எவற்றையும் தாக்கல் செய்தல் அல்லது, நேர்விற்கேற்ப, ஏதேனும் அதிகார அமைப்பு அல்லது வணிகர், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், அறிக்கை, ஆவணம், கணக்கு விவர அறிக்கை அல்லது விளக்க அறிக்கை எவற்றையும் அளித்தல்,

எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நடவடிக்கையின் அந்த நிறைவு அல்லது உடன்பாடு போன்றவற்றை அத்தகைய காலத்திற்குள்ளாக செய்யப்படவில்லை என்றாலும், 2020 ஜுன் 30–ஆம் நாள் அல்லது 2020 ஜுன் 30–ஆம் நாளுக்குப் பின்பு அரசு, அறிவிக்கையின் வாயிலாக, இதன்பொருட்டு குறிப்பிடப்படலாகும், அத்தகைய பிற தேதி வரையில் நீட்டிக்கப்பட்டிருக்கும்:

வரம்புரை:– கூறு (a) அல்லது கூறு (b)–இன் படி வெவ்வேறு நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக அல்லது உடன்படுத்துவதற்காக அரசானது வெவ்வேறு தேதிகளை குறிப்பிடலாம்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**5.** (1) 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2020

(2) அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை.**

இந்தியா உள்ளடங்கலாக உலகிலுள்ள பல நாடுகளில் கோவிட்–19 பெருந்தொற்றுநோய் பரவலின் காரணமாக, வணிக சமுதாயம் உட்பட, மக்களின் வாழ்வாதாரத்திற்கு மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளதன் விளைவாக, 2017 ஜூன் 30–ஆம் நாள் வரை வணிகவரித் துறையினால் நிர்வகிக்கப்பட்ட சில சட்டங்கள் மற்றும் 2017 ஜூலை 1–ஆம் நாளுக்குப் பின்பு நடைமுறைக்கு வந்து நிர்வகிக்கப்படும் அத்தகைய சட்டங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்ட, அல்லது வகுத்துரைக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட, கால வரம்பை தளர்த்துவது கட்டாயமாகிவிட்டது. கூறப்பட்ட சட்டங்களின் கீழ் ஆணையிடப்பட்ட சட்ட வகைமுறைகளின் நிறைவு அல்லது உடன்பாட்டிற்காக, அது பேரிடரின் காரணமாக, வகுத்துரைக்கப்பட்ட கால அளவிற்குள் நிறைவு அல்லது உடன்படுத்தவியலாத, அறிவிப்பு வெளியிடுதல், அறிவிக்கைகள், செயல்முறை ஆணைகளை நிறைவு செய்தல், அதிகார அமைப்புகள் அல்லது தீர்ப்பாயங்களினால் ஆணைகள் பிறப்பித்தல், மேல்முறையீடு, பதில்கள் அல்லது விண்ணப்பங்களை தாக்கல் செய்தல் அல்லது தேவைப்படும் போது அறிக்கைகள் அல்லது கணக்கு விவர அறிக்கைகள் அல்லது விளக்க அறிக்கைகள் அல்லது ஆவணங்கள் அளித்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கும். எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக அவசரச் சட்டமொன்றைப் பிறப்பிப்பதென, அரசு முடிவு செய்திருந்தது.

2. அவ்வாறே, 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புச் சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 5/2020) ஆளுநரால் 2020–ஆம் ஆண்டு மே திங்கள் 22–ஆம் நாளன்று பிரகடனப்படுத்தப்பட்டு, அது 2020–ஆம் ஆண்டு மே திங்கள் 23–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன அவசரச் சட்டத்தினை மாற்றியமைக்க விழைகிறது.

சென்னை,
2020 செப்டம்பர் 15.

**கே.சி. வீரமணி,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2020

### 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) (i) 11 மற்றும் 14 ஆகிய பிரிவுகள் 2017–ஆம் ஆண்டு ஜுலை 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ii) 12–ஆம் பிரிவானது 2020–ஆம் ஆண்டு மார்ச் 31–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(iii) 2 மற்றும் 13 ஆகிய பிரிவுகள் 2020–ஆம் ஆண்டு ஜுன் 30–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(iv) 16–ஆம் பிரிவானது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்; மற்றும்

(v) இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகள், மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக, குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 19/2017.

2–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என்று குறிப்பிடுவதான) 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில், (114)–ஆம் கூறில், (c) மற்றும் (d)–ஆம் உட்கூறுகளுக்குப் பதிலாக, பின்வரும் உட்கூறுகளானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(*c*) தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டயூ;

(*d*) லடாக்;''.

10–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 10–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில், (b), (c) மற்றும் (d)–ஆம் கூறுகளில் ''சரக்குகளின்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது சேவைகள்'' என்ற சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

16–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 16–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், ''தொடர்பான விலைப்பட்டியல்'' என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

29–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 29–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (c) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(c) வரி விதிக்கத்தக்க நபர், 22–ஆம் பிரிவின் கீழோ அல்லது 24–ஆம் பிரிவின் கீழோ பதிவு பெறுவதற்கு இனிமேலும் பொறுப்புடையவராகமாட்டார் அல்லது 25–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் கீழ் தன்னிச்சையாக பதிவு பெற்றதிலிருந்து வெளியேற விரும்புகிற:''.

30–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 30–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் வரும் வரம்புரைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புரையானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**"வரம்புரை.–** போதுமான காரணங்கள் காண்பிக்கப்படுமாயின் மற்றும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, அத்தகைய கால அளவானது நீட்டிக்கப்படலாம்,—

(a) கூடுதல் ஆணையர் அல்லது இணை ஆணையரால், நேர்விற்கேற்ப, முப்பது நாட்களுக்கு மிகாத கால அளவிற்கு;

(b) ஆணையாளரால், (a) கூறில் குறிப்பிடப்பட்ட கால அளவிற்கு மேற்படாமல் மேலும் முப்பது நாட்களுக்கு மிகாத கால அளவிற்கு.''.

**7.** முதன்மைச் சட்டத்தின் 31–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில் வரும் வரம்புரைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புரையானது அமைக்கப்டுதல் வேண்டும், அதாவது:—

31–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**"வரம்புரை.–** அரசானது, மன்றத்தின் பரிந்துரையின் பேரில், அறிவிக்கையின் வாயிலாக,—

(a) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலத்திற்குள், வழங்குகைகளின் வகைகளை அல்லது எந்த சேவைகளைப் பொருத்து வரி விலைப்பட்டியல் வழங்குதல் வேண்டுமென குறிப்பிடுதல்;

(b) குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு, சேவைகளின் வகைகளை குறிப்பிட்டு, அவற்றுள்—

(i) வழங்குகை தொடர்பாக வழங்கப்பட்ட பிற ஆவணம் எதுவும் வரி விலைப்பட்டியல் எனக் கருதப்பட வேண்டும்; அல்லது

(ii) வரி விலைப்பட்டியல் வழங்கப்படாதிருக்கலாம்.''.

**8.** முதன்மைச் சட்டத்தின் 51–ஆம் பிரிவில்,—

51–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(a) (3)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(3) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய படிவத்திலும் ஆதாரத்தில் வரி பிடித்தம் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.'';

(b) (4)–ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 122–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

122–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

''(1A) (1)–ஆம் உட்பிரிவின் (i), (ii), (vii) மற்றும் (ix)–ஆம் கூறுகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட பரிமாற்றத்தின் பயனை தக்க வைத்துக்கொள்ளும் நபர் எவரும் மற்றும் அத்தகைய பரிமாற்றம் எவருடைய வேண்டுதலின் பேரில் நடத்தப்படுகிறதோ, ஏய்க்கப்பட்ட வரிக்கு அல்லது பயன்படுத்திக் கொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட உள்ளீட்டு வரிவரவுக்கு சமமான தொகையை தண்டத் தொகையாக செலுத்த அவர் பொறுப்புடையவராகுதல் வேண்டும்.''.

**10.** முதன்மைச் சட்டத்தின் 132–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில்,—

132–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) "பின்வரும் குற்றச் செயல்கள் எவற்றையும் செய்கிற எவரேனும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "பின்வரும் குற்றச் செயல்கள் எவற்றையும் எவரேனும் செய்தாலும், அல்லது நிகழ்த்தல் செய்தாலும் மற்றும் அச்செயல்களின் மூலம் தோன்றும் பயன்களை தக்கவைத்துக் கொண்டாலும்" என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (c) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(c) (b) கூறில் சுட்டப்பட்ட விலைப்பட்டியல் அல்லது பட்டியைப் பயன்படுத்தி உள்ளீட்டு வரிவரவை பயன்படுத்துகிறவிடத்து அல்லது விலைப்பட்டியல் அல்லது பட்டி எதுவும் இல்லாமல் மோசடியாக உள்ளீட்டு வரிவரவை பயன்படுத்துகிறவிடத்து;'';

(3) (e) கூறில் "உள்ளீட்டு வரிவரவை மோசடியாக பயன்படுத்துதல்" என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**140–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.**

**11.** முதன்மைச் சட்டத்தின் **140–**ஆம் பிரிவில்,—

(1) (1)–ஆம் உட்பிரிவில், ''தற்போதைய சட்டம்'' என்ற சொற்றொடருக்குப் பின்பு, ''மற்றும் அத்தகைய காலத்திற்குள்'' என்ற சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

(2) (2)–ஆம் உட்பிரிவில், ''குறித்திட்ட நாள்'' என்ற சொற்றொடருக்கு பின்பு, ''மற்றும் அத்தகைய காலத்திற்குள்'' என்ற சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவில், ''அதற்குட்பட்டு குறித்திட்ட நாளில் இருப்பில் வைக்கப்பட்ட சரக்குகள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''அதற்குட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலத்திற்குள் குறித்திட்ட நாளில் இருப்பில் வைக்கப்பட்ட சரக்குகள்'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (5)–ஆம் உட்பிரிவில், ''தற்போதைய சட்டம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலத்திற்குள் தற்போதைய சட்டம்'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (6)–ஆம் உட்பிரிவில், ''அதற்குட்பட்டு குறித்திட்ட நாளில் இருப்பில் வைக்கப்பட்ட சரக்குகள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''அதற்குட்பட்டு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலத்திற்குள் குறித்திட்ட நாளில் இருப்பில் வைக்கப்பட்ட சரக்குகள்'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

168-A எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

**12.** முதன்மைச் சட்டத்தின் **168–**ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

**"168–A. சிறப்பு சூழ்நிலைகளில் கால வரம்பை நீட்டிக்க அரசுக்குள்ள அதிகாரம்.**—(1) இந்த சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அரசானது, மன்றத்தின் பரிந்துரைகளின் பேரில், அறிவிக்கையின் வாயிலாக, பேரிடரின் காரணமாக நிறைவு செய்யவோ அல்லது உடன்படவோ முடியாத செயல்களை பொருத்தவரை, இந்த சட்டத்தின் கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட அல்லது வகுத்துரைக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட காலவரம்பை நீட்டிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)–இன் படி அறிவிக்கை வெளியிடுவதற்கான அதிகாரமானது, இந்த சட்டத்தின் தொடக்க தேதிக்கு முன்னதாக அல்லாத ஒரு தேதியிலிருந்து அத்தகைய அறிவிக்கைக்கு பின்னோக்கிய விளைவை அளிக்கும் அதிகாரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

**விளக்கம்.—** இந்த பிரிவின் நோக்கத்திற்காக, ''பேரிடர்'' என்ற சொற்றொடரானது போர், தொற்றுநோய், வெள்ளம், வறட்சி, தீ, புயல், நில நடுக்கம் அல்லது இயற்கையால் ஏற்படும் வேறு ஏதேனும் பேரிடர் அல்லது இந்த சட்டத்தின் எந்தவொரு வகைமுறைகளின் செயல்பாட்டினையும் பாதிக்கும் வேறு எதுவும் எனப் பொருள்படும்.''.

172–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 172–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில் உள்ள வரம்புரையில், ‘‘மூன்று ஆண்டுகள்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ஐந்து ஆண்டுகள்’’ என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

II–ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**14.** முதன்மைச் சட்டத்தின் II–ஆம் இணைப்புப் பட்டியலில், 4–ஆம் பத்தியில், ‘‘மறுபயனுக்காகவாயினும் அல்லது இல்லாவிடினும்’’ என்ற சொற்றொடர் வரும் இரண்டு இடங்களிலும், அது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

குறித்த சில நேர்வுகளில் மாநில வரியிலிருந்து பின் தேதியிட்டு விலக்களித்தல், அல்லது வரி விதித்தல் அல்லது வசூலித்தல்.

**15.** (1) 2017 ஜுன் 29–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டின் பாகம் II-பிரிவு 2–ல், பக்கங்கள் 3 முதல் 68–இல் வெளியிடப்பட்ட 2017 ஜுன் 29–ஆம் நாளிட்ட II(2)/வவப/532(d-4)/2017–ஆம் எண்ணுள்ள வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் அறிவிக்கையில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மன்றத்தின் பரிந்துரையின் பேரில், முதன்மைச் சட்டத்தின் 9–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரங்களை செயல்படுத்துவதில்,—

(i) 2017 ஜுலை 1–ஆம் நாள் தொடங்கிய காலம் முதல் 2019 செப்டம்பர் 30–ஆம் நாள் முடியும் வரையுள்ள (இரு தேதிகளும் உள்ளடங்கலான) காலத்தில், (2301–ஆம் தலைப்பின் கீழ் வரும்) மீன் உணவு வழங்குதல் தொடர்பாக எந்தவொரு மாநில வரியும் விதிக்கப்படுதல் அல்லது வசூலிக்கப்படுதல் கூடாது;

(ii) 2017 ஜுலை 1–ஆம் நாள் தொடங்கிய காலம் முதல் 2018 டிசம்பர் 31–ஆம் நாள் முடியும் வரை (இரு தேதிகளும் உள்ளடங்கலான) (8483–ஆம் தலைப்பின் கீழ் வரும்) கப்பி, சக்கரங்கள் மற்றும் பிற பாகங்களின் வழங்குதல் தொடர்பாக மற்றும் (8432, 8433 மற்றும் 8436–ஆம் தலைப்பின் கீழ் வரும்) வேளாண் இயந்திரங்களின் பாகங்களாக பயன்படுவன தொடர்பாக ஆறு சதவிகிதம் மாநில வரி விதித்தல் வேண்டும் அல்லது வசூலித்தல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவானது அனைத்து நேரங்களிலும் இருந்திருக்குமே எனில், அவ்வாறு வசூலிக்கப்படாமல் இருந்திருக்கக்கூடிய, வசூலிக்கப்பட்ட அத்தகைய அனைத்து வரியையும் திரும்ப வழங்கப்படமாட்டாது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2020.
தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2020.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**16.** (1) 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம் மற்றும் 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறு முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட எதுவும் இந்த சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்படிச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 19/2017), மாநில அரசால் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் மாநிலத்திற்குள் வழங்குதல் போது வரிவிதிப்பதற்கும் மற்றும் வசூலிப்பதற்கும் வகைசெய்கிறது.

2. பேரிடர் காரணத்தினால் நிறைவு செய்ய அல்லது உடன்பட முடியாத 2017–ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (மையச் சட்டம் 12/2017) கீழ் குறித்துரைக்கப்பட்ட, வகுத்துரைக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட பல்வேறு உடன்பாடுகளான வெளிப்புற வழங்குகைகளுக்கான அறிக்கை தாக்கல் செய்தல், திரும்பவும் வழங்கும் தொகையை பெறுவதற்கான உரிமை கோருதலை தாக்கல் செய்தல், மேல்முறையீடுகளை தாக்கல் செய்தல் முதலியவைகளுடன் சேர்த்து பற்பல இணக்கங்களுக்குரிய நாட்களை நீட்டிக்க, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரைகளின் பேரில், மைய அரசுக்கு அதிகாரம் வழங்கிடும் பொருட்டு, மைய அரசானது கூறப்பட்ட மையச் சட்டம் 12/2017–இல், பிறவற்றுக்கிடையே, 168A-ஆம் பிரிவினை புகுத்த வழிவகை செய்ய 2020–ஆம் ஆண்டு வரிவிதிப்பு மற்றும் பிற சட்டங்கள் (குறித்த சில வகைமுறைகளின் தளர்வு) அவசரச் சட்டத்தை (எண் 2/2020) 2020 மார்ச் 31 அன்று பிறப்பித்தது. கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 19/2017–இல் ஒத்திசைவான திருத்தம் செய்வது தேவைப்படுகிறது. எனவே, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 19/2017–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்தது. அதற்கிணங்கியவாறு, 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2020) தமிழ்நாட்டின் ஆளுநரால் 2020 மே 22–ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டு மற்றும் அது 2020 மே 23–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. மேலும், சரக்குகள் மற்றும் சேவைககள் வரி மன்றத்தின் பரிந்துரைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக, மைய அரசு 2020–ஆம் ஆண்டு நிதிச் சட்டம் (மையச் சட்டம் 12/2020) மூலம் கூறப்பட்ட மையச் சட்டம் 12/2017–ஐ மீண்டும் திருத்தம் செய்தது. கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 19/2017–இல் ஒத்திசைவான திருத்தம் செய்வது தேவைப்படுகிறது. எனவே, கூறப்பட்ட தமிழ்நாடுச் சட்டம் 19/2017–ஐ தக்கவாறு திருத்தங்களை செய்வதென அரசு முடிவு செய்தது. அதற்கிணங்கியவாறு, 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2020) தமிழ்நாட்டின் ஆளுநரால் 2020 ஜுலை 28–ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டு அதே நாளில் ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

4. இந்த சட்டமுன்வடிவானது மேற்சொன்ன இரண்டு அவசரச் சட்டங்களை மாற்றியமைக்க விழைகிறது.

சென்னை,
2020 செப்டம்பர் 15.

**கே.சி. வீரமணி,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.